**செய்தி வெளியீடு எண்: 80** **நாள்: 29.01.2020**

**<u>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்</u>**

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ கழிவுகள் சுத்திகரிப்பு நிலையங்களை மருத்துவ கழிவுகள் மேலாண்மை விதிகள், 2016ன் படி, அவை செயல்படும்விதத்தை கண்காணித்து வருகிறது. இவ்விதிகளை மீறும் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ கழிவுகள் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது மூடுதல் மற்றும் மின் இணைப்பு துண்டித்தல் உத்தரவு வழங்கியும் மேலும் சுற்றுச்சூழல் இழப்பீட்டு தொகை வசூலித்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சமீபகாலமாக, பல்வேறு ஊடகங்களில் காலாவதியான மருந்துகள் மற்றும் மருத்துவ கழிவுகள் கொட்டப்படுவதால் அங்குள்ள நீர்நிலைகளில் சுற்றுச்சூழல் சீர்கேடு ஏற்படுவதாகவும் மற்றும் அங்குள்ள குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு உடல்நல பாதிப்பு ஏற்படுவதாகவும் புகார்கள் வந்துள்ளன.

மருத்துவ கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016ன் படி, குடியிருப்பு / வீடுகளில் மருத்துவ செயல்பாடுகளால் உற்பத்தியாகும் காலாவதியான மருந்துகள், உடைந்த பாதரச வெப்பமானிகள், பயன்படுத்தப்பட்ட ஊசிகள் மற்றும் பஞ்சு ஆகியவற்றை தனி பைகளில் சேகரித்து நகராட்சி ஊழியர்களிடம் கொடுக்க வேண்டும்.

மேலும், மருந்து விநியோகஸ்தர்கள், காலாவதியான / தேவையற்ற மருந்துகளை உற்பத்தியாளர்கள் மூலமாகவோ அல்லது அறிவியல் பூர்வமாகவோ மருத்துவ கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016ன் படி அப்புறப்படுத்த வேண்டும்.

மருத்துவ கழிவுகளை, விதிகளை மீறியோ அல்லது திடக்கழிவுகளுடனோ கலந்து கொட்டக்கூடாது. இதை மீறுபவர்கள் மேல் உள்ளாட்சி அமைப்புகள் கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**